உ

# குருபாதம்

திருக்கைலாய பரம்பரை தருமபுர ஆதீனம்
அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்

மதுரையில் நடத்தும்
4 ஆவது அனைத்துலக

# சைவசித்தாந்த மாநாடு

2008 மார்ச் திங்கள் 21,22,23
(வெள்ளி, சனி, ஞாயிறு)

சைவத்தின் மேல் சமயம் வேறிலை அதில்சார் சிவமாம்
தெய்வத்தின் மேல்தெய்வம் இல்லை என்னும் நான்மறை

சைவமும் தமிழும் தழைத்து இனிது ஓங்குக

**தருமபுர ஆதீனம், தருமபுரம்**
மயிலாடுதுறை 000 001, தமிழ்நாடு, தென் இந்தியா



பேரன்புடையீர்

திருவள்ளுவராண்டு 2039 பங்குனித் திங்கள் 8,9,10, (2008. மார்ச் 21, 22, 23) வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் திருக்கைலாய பரம்பரை தருமபுர ஆதீனம் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் நடாத்தும் 4-ஆவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடு மதுரையில் மிகச் சிறப்பாக நிகழ உள்ளமையை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் தருமையாதீனம் 26-குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின் திருக்கரங்களால் 1984-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. இந்நிறுவனம் "ஞானசம்பந்தம்" எனும் திங்கள் இதழ்மூலம் பல ஆய்வுக் கட்டுரைகளையும் பல்வேறு ஆராய்ச்சி நூல்களையும் தமிழுலகுக்கு வழங்கிவருகிறது. மேலும் 1984ல் தருமபுரத்திலும், 1986ல் மலேசியாவிலும், 1988ல் வாரணாசியிலும் சைவ சித்தாந்தக் கருத்தரங்குகளை மிகச்சிறப்பாக நடாத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளில் வாழும் சைவ அன்பர்கள் தங்கள் நாடுகளில் நடாத்தும் சைவமாநாடுகளில் தருமைஆதீன ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை எழுந்தருளுமாறு விண்ணப்பித்து வருகிறார்கள் மரபுவழி நின்று சைவப் பாரம்பரியங்களைக் கடைப்பிடித்து வரும் குருமகா சந்நிதானம் அவர்களால் வெளிநாடுகள் செல்வதற்கு முடியாமலுள்ளது. இதனால் வெளிநாடுகளில் உள்ள சைவ அன்பர்களை மதுரை மாநாட்டில் கலந்துகொள்ள வாய்ப்பளித்துள்ளார்.

சைவ சமயம் காலப் பழமையுடையது. சிந்துவெளி நாகரிகத்திற்கும் முற்பட்டது என்பது வரலாற்று ஆய்வு முடிவு.

பாரத நாடு பழம்பெரும் நாடு – நீர் அதன்
புதல்வர் இந்நினைவினை அகற்றாதீர்

(என்பது மகாகவி பாரதியாரின் வாக்கு)

இந்தியத் திருநாடு மிகப் பழமையான சிவவழிபாட்டிற்கும் பண்பாட்டிற்கும் கலாசாரத்திற்கும் உரியதாகும். உலகின் மிகச்சிறந்த ஞானிகளும் அருளாளர்களும் வழங்கிய அரிய சைவசமய இலக்கிய வளங்களைப் பெற்ற பெருமைக்குரியது. இத்தகு பழமையும் பெருமையும் உடைய சைவ சமயம் உலகளவில் பரந்து சிறந்துள்ளது. நம் சைவ சமய அருளாளர்களும் “உலகம்” என்பதை முன் வைத்துத் தம் அருட்பாக்களை வழங்கியுள்ளனர். சைவ சமயம், வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், சங்க இலக்கியம், பன்னிருதிருமுறைகள், சித்தாந்த சாத்திரங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இத்தகு பெருமையுடைய பழமையான இலக்கியங்களும், மரபுகளும், பண்பாட்டுக் கலாசாரங்களும் தற்பொழுது சிதைவுற்றும் சீர்குலைந்தும் வரும் காலகட்டத்தில் நாம் இருந்து வருகின்றோம். பாரதநாட்டின் சீர்மைக்குரிய இவற்றைப் புத்தாக்கத்தோடு உயிர்ப்பிக்கும் மரபு வழி மாநாட்டுக் கருத்தரங்காக மலர்கிறது.

மேலும் பழமையான சைவ சமய இலக்கியங்கள் குறித்த வினாக்களும், தர்க்கங்களும், புதிய சிந்தனைகளும், படைப்புக்களும் பல நிலையில் வளர்ந்து வருகின்றன. அவற்றை முறைப்படுத்தவும் முழுமையாக ஆராய்ந்து பதிவு செய்திடவும் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சைவசமயத் திருமுறைகளில், சாத்திரங்களில், தத்துவங்களில் சிறந்த உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வறிஞர்களும், ஆர்வலர்களும், பேராசிரியர்களும், சான்றோர்களும் கலந்து கொள்ளவும் சைவ சமய ஆய்வுக் கட்டுரைகள் வழங்கிச் சிறப்பிக்கவும் அன்புடன் அழைக்கின்றோம்.

இம்மாநாட்டில் இந்தியாவிலுள்ள பல சைவ அமைப்புக்களும், பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம், மலேசியா மகாமாரி அம்மன் தேவஸ்தானம், அகில இலங்கை இந்து மாமன்றம், கனடா இந்து கலாச்சார மன்றம், ஆஸ்த்ரேலியா சைவ மன்றம் உள்ளிட்ட பல சமய ஸ்தாபனங்களும் மற்றும் மொரீஷியஸ், தென் ஆபிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் உள்ள சைவ நிறுவனங்களும் பங்கேற்க உள்ளன.

இம்மாநாட்டில் சைவ ஆதீனங்களின் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு அமைச்சர்கள், சிவாச்சாரியார்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், சைவ சமய அறிஞர்கள், ஆலய அறங்காவலர்கள் ஆலய நிர்வாகிகள் பலரும், சமய ஆர்வலர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

மாநாட்டிற்கான சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்பட உள்ளது. இது தவிர ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய மற்றுமொரு மலரும் வெளியிடப்படும்.

## கருத்தரங்கப் பொதுத் தலைப்பு

“வேத, ஆகம, புராண, இதிகாச, சங்க இலக்கிய, திருமுறை, சித்தாந்தசாத்திர இலக்கியங்களில் சைவசித்தாந்தச் செம்பொருள்கள் - ஆய்வுகள்”.